00126

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித் துறை

சிறப்பு கல்விமாணி (ஆரம்பக் கல்வி) நிகழ்ச்சித்திட்டம் -2021/2022 -மட்டம்-3

இறுதிப் பரீட்சை - 2023

**EPU3234**– கலைத்திட்ட கற்கையும் செய்கையும் அழகியல் ஆக்கக் கல்வியும்

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி: 14.01.2023 நேரம்: பி.ப 1.30 - பி.ப 3.30

பகுதி I

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. 'அழகியல்' என்பதை உமது மொழிநடையில் வரையறுக்குக.
2. ஆக்கச்செயற்பாடுகள் எந்தளவு முன்பள்ளி வகுப்பறையில் செல்வாக்குச் செலுத்துகின்றதென பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.
3. முன்பள்ளிக் கல்வி , ஆரம்ப கல்வி என்பவற்றுக்கு ஆசிரியரொருவர் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் போது கருத்திலெடுக்கவேண்டிய முக்கிய விடயங்கள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக?
4. முன்பள்ளிக் கல்வியில் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கில் நாடக ரீதியான செயற்பாடுகளை திட்டமிடவேண்டியதன் முக்கியத்துவத்தினை பொருத்தமான உதாரணங்களுடன் விபரிக்குக.
5. ஆக்கச்செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள் ஐந்தினை (05) பெயரிடுக.
6. பிள்ளைகளின் உணர்வு விருத்திக்காக கவிதை, பாடல் போன்றவற்றை செயற்பாடுகளில் பயன்படுத்தவதன் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விபரிக்க.
7. பிள்ளைகளின் வரைதலில்(சித்திரம்) பிரதான கட்டங்களைப் பெயரிடுக.
8. முன்பள்ளியிலும், ஆரம்பப் பாடசாலையிலும் வெளிப்புற கற்றல் சூழலைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக?

**(8x5=40** புள்ளிகள்)

## பகுதி II

9.

(i) பல்வகை மதி கோட்பாட்டினூடாக அறிமுகம் செய்யப்பட்ட எட்டு வகையான நுண்மதிகளையும் பெயரிடுக..

(08 புள்ளிகள்)

(ii) மேலே குறிப்பிட்ட நுண்மதி வகைகளில் ஏதாவதொன்றை தெரிவுசெய்து அது பிள்ளை வளர்ச்சியில் தாக்கம் செலுத்துமென்பதை உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(12 புள்ளிகள்)

10.

(i) இசை , தாளலய செயற்பாடுகளினூடாக விருத்திசெய்யக்கூடிய நான்கு திறன்களைப் பெயரிடுக.

(06 புள்ளிகள்)

(ii)பொருத்தமான செயற்பாடொன்றினை உதாரணமாக முன்வைப்பதனூடாக கவர்ச்சிகரமான, ஊக்கப்படுத்தக்கூடிய முன்பள்ளி, ஆரம்ப பிரிவு கற்றல் சூழலில் இசை, தாளலய நிகழ்வுகளை எவ்வாறு பயன்படுத்தலாம் விளக்குக.

(14 புள்ளிகள்)

11.

(i) நாடகப்பாங்கான கதைகூறல் கற்றலினூடாக சிறுவர்கள் பெறக்கூடிய அனுகூலங்கள் ஐந்தினைப் (05) பெயரிடுக.

(05 புள்ளிகள்)

(ii) நாடக அடிப்படை கற்பித்தல் மாதிரியைத் தெரிவுசெய்து. அந்த மாதிரிக்குப் பொருத்தமாக முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான செயற்பாடொன்றை ஒழுங்கமைக்குக. அந்தச் செயற்பாட்டின் பொருத்தப்பாடு யாதென விளக்குக.

(15 புள்ளிகள்)

12.

(i) முன்பள்ளி வகுப்பறைக்குப் பொருத்தமாக ஆக்கச்செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக் கூடிய இசைக்கருவிகள் ஐந்தினைப் (05) பெயரிடுக.

(05 புள்ளிகள்)

(ii) "முன்பள்ளிப் பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் அழகியலும் ஆக்கச்செயற்பாடுகளும் உறுதியான செல்வாக்கினைச் செலுத்துகின்றன." இக்கூற்றினைப் பற்றிய உங்களது கருத்துக்களை விபரிக்க.

(15 புள்ளிகள்)

13.

(i) முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான கற்றல்- கற்பித்தலில் பாவைப் பிள்ளைகளைப் பயன்படுத்துவதன் நோக்கத்தை ஐந்து (05) காரணங்களை முன்வைத்து விளக்குக.

(05 புள்ளிகள்)

(ii) பொருத்தமான செயற்பாடொன்றினூடாக பாவைப் பிள்ளைகளை எவ்வாறு கற்றல் சாதனமாக பயன்படுத்த முடியுமென குறிப்பிடுக.

(15 புள்ளிகள்)

*பதிப்புரிமைபெற்றது*